**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, RANIPET**

Case No. **SC.No.77/2023**
Prosecution: **PW** -9

**Deposition of the witness of LW-** 4

| | | | |
|---|---|---|---|
| **Name** | அசோக் | **District** | திருவண்ணாமலை |
| **Father's Name** | சுப்பரமணி | **Calling** | டெலிவரி பாய் |
| **Age** | 25 | **Religion** | |
| **Village/Town** | வரதராஜபுரம் | **Caste** | |
| **Taluk** | ஆரணி | **Aadhar Card No.** | 5396 7338 4295 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st day of July 2026.

1ம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3, 5 எதிரிகள் ஆஜர். 4ம் எதிரி சிறை காவலில் இருந்து பிடி ஆணை மூலம் ஆஜர் படுத்தப்பட்டார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை:–</u>

1. நான் எண்.1/62 பிள்ளையார் கோவில் தெரு, வரதராஜபுரம், ஆரணி, திருவண்ணாமலையில் வசித்து வருகிறேன். டெலிவரி பாயாக வேலை செய்து வருகிறேன். சுமார் 8 வருடத்திற்கு முன்பு நான், நிஷா, தனக்கோட்டி மற்றும் சங்கீதா ஆகியோர் சிவன் கோவிலுக்கு சென்றோம். நாங்கள் கோவிலில் சாமி கும்பிட்டுவிட்டு வரும்போது 4,5 நபர்கள் எங்களை மிரட்டினார்கள். அப்போது போலீசார் அங்கு வந்துவிட்டார்கள்.

2. போலீசார் எங்களை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து எங்கள் முகவரிகளை பெற்றுகொண்டு அனுப்பிவைத்துவிட்டார்கள். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக சாட்சியம் அளிக்காததால், அவரை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டார். சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. காவல்துறையினர் விசாரணையின் போது 30.01.2018ம் தேதி காலை 09.45 மணிக்கு நானும், சங்கீதாவும், நிஷா, தனகோட்டியுடன் ஆயிலம், ராமாபுரத்தில் உள்ள லிங்கேஷ்வரன் கோவிலுக்கு இருசக்கர வாகனத்தில் சென்று அங்கு தரிசனம் முடித்துவிட்டு பகல் 11 மணிக்கு பைரவர் கிரி கோவில் அருகே வந்தபோது 4 நபர்கள் எங்களை வழி மடக்கினார்களா என்றால் சரியல்ல.

2. அதில் 2 நபர்கள் நிஷாவையும், சங்கிதாவையும், தலை முடியை பிடித்து இழுத்துகொண்டு பைரவர் கோவில் அருகே சென்றபோது அவர்களுடன் வந்த நானும், தனகோட்டி கூச்சல் போட்டு எங்களை காப்பாற்ற முயன்றபோது மற்ற இருவர்களையும் பார்த்து டே விஜய், நாராயணன் என பெயர் சொல்லி அவர்களை பிடித்து கழுத்தில் கத்தியை வையுங்கடா அப்போது சத்தம்போட மாட்டார்கள். என்று கூறிகார்கள் என்றால் சரியல்ல.

3. 4 நபர்களில் கருப்பாக, குண்டாக, தாடி வைத்திருந்த நபர் தனகோட்டி கழுத்திலும், ஒல்லியாக கருப்பாக இருந்த நபர் என் கழுத்தில் கத்தியை வைக்கவே நாங்கள் பயந்து கூச்சல் போடுவதை நிறுத்திவிட்டோம் என்றால் சரியல்ல. மற்ற இருவரில் ஒரு நபர் நிஷாவின் தலை முடியை பிடித்து இழுத்து சென்று நிஷாவின் நகைகளை கேட்டபோது அவர் அணிந்திருந்த கம்பலை கழற்றி பாஸ்கர் கையில்

கொடுத்ததாகவும், சங்கீதாவின் தலை முடியை பிடித்து வைத்திருந்த பாஸ்கரிடம் சங்கீதா தான் அணிந்திருக்கும் செயின் கவரிங் செயின் என்று கூறியதால் அவரை பாஸ்கர் விட்டுவிட்டதாகவும், நிஷா அணிந்திருந்த கம்பலின் மதிப்பு சுமார் 5000 ரூபாய் இருக்கும் என்றால் சரியல்ல. தனகோட்டியும், நானும் அவர்களை பிடித்து வைத்திருந்த நபர்களை தள்ளிவிட்டு அவர்களை காப்பாற்ற முயன்றபோது, அந்த 4 நபர்கள் தாங்கள் வைத்திருந்த கத்தி மற்றும் வண்டியை போட்டுவிட்டு ஓடிவிட்டதாகவும், கூச்சல் சத்தம் கேட்டு கோவில் நிர்வாகி சரவணன், மற்றும் ஊர்பொதுமக்கள் வந்து பிடிக்க முற்பட்டபோது அவர்களை பார்த்து கத்தியை காட்டி எங்களை பிடித்தால் உங்களை கத்தி கொலை செய்து விடுவோம் என்று மிரட்டிவிட்டு அங்கிருந்த தப்பி ஓடியதாகவும், சம்பவம் குறித்து நிஷா காவல் நிலையம் சென்று புகார் வாக்குமூலம் அளித்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரிகளை வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>

இல்லை.

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-A.Daoudh Ammal,
Assistant Sessions Judge/Chief Judicial Magistrate, Ranipet.